உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௬] யாழ்ப்பாணம்:—தாரண ஹூ ஆனி மீ ௨௨ (1944 ஜூன் மீ 15 வியாழக்கிழமை) [இல ௨௦

## பிரான்ஸுக்கு ஜெர்மன் தளபதியின் எச்சரிக்கை

### ஆயுதந்தாங்கிக் கலகஞ்செய்வோர் கொல்லப்படுவர்

### பிரெஞ்சுத் தேசாபிமானிகளின் ஆத்திரம்

லண்டன் யூன் 12

ஜெர்மானியருக்கெதிராக ஆயுதங்களுடன் புரட்சி செய்யும் பிரஞ்சுக்காரர் கொல்லப்படுவரென்று பயமுறுத்திப் பிரான்ஸிலுள்ள ஜெர்மன் பிரதம சேனாதிபதி வெளியிட்ட அறிக்கையைப் பாரிஸ் றேடியோ இன்று காலை ஒலிபரப்பியது.

பிரஞ்சு எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கலகக்காரர்களென்று கருதப்படுவார்களென்றுஞ் சாதாரண போர்வீரருக்குள்ள உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாவென்றும் அந்த அறிக்கை கூறுகிறது. எதிர்ப்புக் கோஷ்டிகள் ஹேக் ஒப்பந்தப்படி பாதுகாக்கப்பட உரிமையுள்ளவர்களென்று யோசனை கூறி, அந்த இயக்கத்துக்குப் புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கச் சத்துரு ஒரு பிரசாரத்தை ஆரம்பித்திருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

### ஒப்பந்தத்தில் இடமிருக்கிறது

பிரஞ்சு மக்கள் ஆயுதந் தரித்து ஜெர்மானியர்களை எதிர்த்தால் அவர்களைப் புரட்சிக்காரர்களைப்போற் பாவிக்கப் பிரான்கோ ஜெர்மன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இடமிருக்கிறதென்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இதுவரை ஜெர்மானியரின் கைகளில் அகப்பட்டிருக்கும் பிரஞ்சு எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யுத்தக்கைதிகளைப்போல் நடத்தப்படமாட்டார்கள். ஆனால், இராணுவச் சட்டப்படி கொல்லப்படுவார்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

### பிரஞ்சுத் தேசாபிமானிகளின் சீற்றம்

ஜெர்மனியருக்கெதிராக ஆயுதந் தரித்து எழும்பும் பிரஞ்சுத் தேசாபிமானிகள் சுட்டுக் கொல்லப்படுவார்களென்று பயமுறுத்தி ஜெர்மன் பிரதம சேனாதிபதி வெளியிட்ட அறிக்கையைப் பாரிஸ் றேடியோ ஒலிபரப்பிய இரண்டு மணிநேரங்களுக்குப் பிறகு, பிரஞ்சுத் தேசாபிமானிகள் வலுத்த தாக்குதலை ஆரம்பித்துவிட்டனரென்று சுவிஸ் றேடியோ அறிவித்தது. அது கூறியதாவது:—

"லெஸ் குளோன் ஓக்ஸெனே மோரோ ஆகிய பகுதிகளில் ஜெர்மானியருக்கும் பிரஞ்சுத் தேசாபிமானிகளுக்கும் மிடையிற் பலத்த சண்டை நடைபெறுவதாகச் சுவிஸ் பிரஞ்சு எல்லைப்புறத்திலிருந்து அறிவிக்கப்படுகிறது. மலைப்பகுதியிலுள்ள ஒரு கிராமத்தைத் தேசாபிமானிகள் பிடித்துக்கொண்டனர். அங்கிருக்கும் ஜெர்மன் படைகள் தங்களுக்கு மேலும் படைகளை வேண்டுமென்று ஓர் அவசரச் செய்தி அனுப்பியிருக்கின்றன.

## புதிய ருஷ்யத் தாக்குதல்

### கரேலியன் தீபகற்பத்தில் ருஷ்யர் முன்னேற்றம்

மொஸ்கோ ஜூன் 11—

கரேலியன் தீபகற்பத்தில் ருஷ்யத் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டதென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது. பின்னிஷ் எல்லைக்குள் சோவியத் துருப்புகள் 25 கிலோ மீட்டர்கள் முன்னேறியிருக்கின்றன. 80 கிராமங்களுக்குமேற் கைப்பற்றப்பட்டன. டெரிஜோகி என்னுமிடமுங் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

1939-40-ம் வருடம் நடைபெற்ற சோவியத்-பின்னிஷ் யுத்தத்தில் டெரிஜோகி அதிகமாக அடிபட்டது. ருஷ்ய ஜெனரல் கோவோரோவிற்கு மார்ஷல் ஸ்டாலின் அனுப்பியிருக்குஞ் செய்தியிற் கூறுவதாவது:—

லெனின்கிராட், போர்முனையிலுள்ள ருஷ்யப்படைகள் ஜூன் 10ந் திகதியன்று லெனின்கிராட்டுக்கு வடமேற்கேயுள்ள கரேலியன் தீபகற்பத்தில் முன்னேறித் தாக்க ஆரம்பித்தன. பலத்த விமானப்பீரங்கித் துணைகளுடன் கூட ருஷ்யர் சத்துரு பாதுகாப்புகளைத் தகர்த்தனர். ருஷ்யர் சத்துரு பாதுகாப்புகளைத் தகர்த்தனர். ருஷ்யர் சத்துரு பிரதேசத்தில் வெகுதூரம் முன்னேறியிருக்கின்றனர்.

இரு நாட்களில் 24 கிலோ மீட்டர் தூரம் ருஷ்யர் முன்னேறியிருக்கின்றனர். இத்தாக்குதலில் ருஷ்யர் டெரிஜோகியினுடைய பெரிய புகையிரத ஸ்தானங்களையும் யாட்கனு என்னும் முக்கிய சத்துரு தளத்தையும் கைப்பற்றினர்.

மொஸ்கோ இன்றிரவு இவ்வெற்றியைப் பீரங்கிப் பிரயோகஞ்செய்து கொண்டாடும்.

### மாறுதலில்லை

இன்றிரவு வெளியான சோவியத் அறிக்கை கூறுவதாவது:— 11-ந் திகதியன்று மற்றப் போர்முனைகளில் மாறுதல்கள் இல்லை. 10-ந் திகதியன்று எல்லாப் போர்முனைகளிலும் 15 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

### பொதுஜன பிரயாணத்திற்குத் தடை

பின்னிஷ் புகையிரதத்தில் பொதுஜனங்கள் பிரயாணஞ் செய்யக்கூடாதென்று தடைகள் விதிக்கப்பட்டிருப்பதாக ஹெல்சிங்கியிலிருந்து செய்திகள் கூறுகின்றனவென்று ஜெர்மன் வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது. இத்தடை முக்கியமாகத் தென் பின்லாந்தில் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது.

---

## திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியார்

தென்காசி யூன் 4

திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியார் அன்று சென்னையிலிருந்து திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் வந்திறங்கினார். திரு. ஆச்சாரியார் குற்றாலத்தில் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரின் விருந்தினராகத் தங்கியிருக்கிறார். திரு. ஆச்சாரியார் [illegible]

## ஹூனானில் கடும் போர்

### ஜப்பானியருக்குச் சீனப் படைகளின் பலத்த எதிர்ப்பு

சுங்கிங் யூன் 11

ராய்ட்டரின் விசேஷநிருபர் எழுதுவதாவது:- சாங்ஷாவிற்கு வடகிழக்கிலும் வடமேற்கிலும் கடுமையான போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜப்பானியத் தாக்குதல்களைச் சீனர் சமாளித்துவருகின்றனர்.

பாதைவழியாகத் தெற்குநோக்கி முன்னேறும் ஜப்பானியத் துருப்புகளின் கோஷ்டி சாங்ஷாவிற்கு 12 மைல் தூரத்திலிருக்கிறது. சியாங் நதியோரமாகத் தென்கிழக்குப்பக்கமாக முன்னேறும் ஜப்பானிய கோஷ்டி நகருக்கு வடமேற்கே 21 மைல் தூரத்தில் இருக்கிறது.

மேற்கு ஹூனானில் ஜப்பானியப் படைகள் லுங்காய்ப் புகையிரதப் பாதையோரமாக முன்னேறி டங்வான் என்னுமிடத்திற்குக் கிழக்கே 40 மைல் தூரத்திலுள்ள லிங்பாவோ என்னுமிடத்தை அடைந்திருக்கின்றன. மஞ்சள் நதியின் தென்கரையில் ஷென்ஸி மாகாணத்தின் வாசற்கதவாக டங்வான் இருக்கிறது.

இன்றிரவு வெளியான சீன அறிக்கை கூறுவதாவது: லிங்பாவோவிற் போர் நிலைமை திட்டமாக இல்லை. லுங்லிங் நகரைச் சீனர் கைப்பற்றிவிட்டபடியால், பர்மாப் பாதையைத் திறக்கும் போராட்டத்திற் சீனருக்குப் பாதிவெற்றி கிடைத்துவிட்டதென்று கூறலாம். மிட்கீனாவிலுள்ள சீனப்படைகளும் சால்வீனிலுள்ள சீனப்படைகளும் பாமோ என்னுமிடத்தில் ஒன்று கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### முன்வந்த செய்தி

சீனாவில் ஹூனான் மாகாணத் தலைநகரான சாங்ஷாமீது ஜப்பானியர் பலமாகப் பீரங்கிப் பிரயோகஞ் செய்து வருகின்றனர். ஆனால், ஜப்பானியர் நகரை நெருங்காமற் பார்த்துக் கொள்ளப்பட்டு வருகிறார்களென்று கடைசியாக வந்த செய்திகள் கூறுகின்றன. லியாங்கிற்கு வடகிழக்கே கோசாங் என்னுமிடத்தைச் சீனர் திரும்பக் கைப்பற்றியிருக்கின்றனர்.

---

## டிராம்கார்க் கண்ணாடியை உடைத்ததாக வழக்கு

மருதானையைச் சேர்ந்த டபிள்யூ. குணசேகர குமாரசிங்க என்பவர் விஷமம் செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கொழும்பு மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூபா 100 அபராதம் விதித்தார்.

இம்மாதம் 7-ந் திகதி மருதானை இரண்டாங் குறுக்குத் தெருவில் குடித்து எதிரி விஷமஞ் செய்ததாகவும் கொழும்பு டிராமவே கம்பெனியாரின் டிராமிலுள்ள ரூபா 2-50 பெறுமதியான கண்ணாடியொன்றை உடைத்ததாகவும் மருதானைப் பொலிஸைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் [illegible] கூறினார்.

## கல்விமந்திரியின் பேச்சு

(முற்றொடர்.)

"பிருத்தானியர் தங்கள் தாய்மொழியாகிய ஆங்கிலத்தையே இலங்கை மக்களுக்குந் தாய்மொழியாக்க வேண்டுமென நோக்கங் கொண்டுள்ளனர். இங்குள்ளார் சிலர் இங்கிலாந்திற்குச் சென்று அங்கே அவர்கள் தாய்மொழியாகிய ஆங்கிலத்தை அறவே யொழித்துச் சிங்களத்தையே அந்நாட்டினர்க்குத் தாய்மொழியாக்க நினைத்தல் எத்துணை அசம்பாவிதமோ அத்துணை அசம்பாவிதமாகும் இந்த அரசினர் கொண்ட நோக்கம்; ஒரு நாட்டினர் இன்னொரு நாட்டினரை வென்று ஆளுதல் வேறு, ஆனால் வெல்லப்பட்ட நாட்டு மக்களின் மதிப்பைக் கெடுக்க நினைப்பதும் அவர்களுடைய ஆன்ம சக்தி முதலியவற்றை மாற்ற நினைப்பதும் பொருந்தாச்செயல்களாம்; உயர்ந்த உத்தியோகம் பார்க்கும் விஷயத்திலே கிறீஸ்த சமயத்தவர்கள் 109 பேரும் பௌத்த மதத்தினர் 28 பேரும் இப்பொழுது இருப்பதை நான் அவதானித்துள்ளேன்; கிறிஸ்தவர்களுக்கே விசேஷமான உதவி கல்வி விஷயத்திற் காட்டப்படுகின்றதென்பதையும், இப்பொழுதுள்ள கல்வி நேரான முறையில் இல்லையென்பதையும் இந்த உதவிபோக நிலைமை காட்டுகின்றது; நற்றவ பரிபாலனத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கும் உபாத்தியாயர், வேறு மதத்துப் பெண்ணைக் கலியாணஞ் செய்தாரென்றகாரணத்தினால் உபாத்திமை உத்தியோகத்திலிருந்து பள்ளிக்கூட அதிகாரிகளினால் சிற்சில இடங்களில் விலக்கப்பட்டமையையும் நான் அறிவேன்; கிறிஸ்தவ கலாசாலை சிலவற்றில், அக்கலாசாலைகளின் அதிகாரிகளாயுள்ளார் தகுதியுடைய ஒரு தலைமையாசிரியரை வைப்பதை விடுத்து, தகுதியற் குறைந்த தலைமையாசிரியராகக் குருமார் கூட்டத்துள் தெரிந்து நியமித்து வருதலும் எனக்குத் தெரியும். வித்தியாசாலை யதிகாரிகளாயுள்ளார் சிலர் தங்கள் அதிகாரத்துள்ள பள்ளிக்கூடங்களை வியாபாரத் தானமாக ஆக்கிக் கொண்டார்கள்; சில மனேஜர்மார் தங்கள் அதிகாரத்திலுள்ள வித்தியாசாலைகளைத் தங்கள் சொந்த சொத்தாக மதித்துத் தங்கள் பெண்பிள்ளைகட்கும் பேரப்பிள்ளைகட்கும் சீதனமாகவும் வழங்கத் தலைப்பட்டுக்கொண்டனர்.

மதக்கட்சிப் பள்ளிக்கூடங்கள் வாயிலாக நேரும் இன்னுமொரு சங்கடமென்னவென்றால், அனேக அதிகாரிகள் தங்கள் பள்ளிக்கூட வாயிலாகத் தங்களுக்குப் பணலாபத்தைத் தேடிக்கொள்ளுகிறார்களென்பதே. ஸேர், ஒலிவர் குணதிலக்க பெயர் தலைமைக் கணக்குப் பரிசோதனை உத்தியோகம் வகித்திருந்த காலத்திலே அரசினருடைய பொதுப்பணத்தில் ஒரு பெருந்தொகை [illegible] 'கள்ளக்'

தொடர்ச்சி ௬-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண ௵
ஆனி ௴ ௨௨ வியாழக்கிழமை

## கல்வி மந்திரியின் பேச்சு

II

அந்நிய சமயத்தவர்களின் அக்கிரமத்தினால் தமிழ்மொழிக்கும் சைவ சமயத்திற்கும் நேர்ந்த குறைகளை நீக்கப் பிறந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களே யென்பது உலகப் பிரசித்தம். கிறிஸ்தவர்கள் தங்கள்மதத்தை எந்தஎந்தவழியினாற் பரப்ப முயன்றனரோ அந்த அந்த வழிகளையெல்லாம் தாமுங் கையாளவும் சைவசமயத்தைப் பரப்பவும் முயன்றார் இந்தப் பெரியார். வித்தியாசாலைகளைத் தாபிப்பதிலும் சிறந்த நூல்களைத் திருத்தி அச்சிடுவதிலும் இக்காலத்திற்கு இன்றியமையாதனவாகிய தமிழ் வசன நூல்களைத் தாமே எழுதி அச்சிடுவதிலும், சிறந்த பிரசங்கங்களைச் செய்வதிலும் சிறிதேனும் ஊக்கங் குன்றாராய், எவ்வெவ்வா நிலைமையும் மேற்கொள்ளாராய்த் தாம் எடுத்துக்கொண்ட சத்கருமத்திலேயே இரவுபகல் உழைத்துத் தமிழ்மொழியையும் சைவ சமயத்தையும் உயர்நிலையில் வைத்தார். இத்தச் செயற்கருஞ் செயல்களைச் செய்வதற்கு நாவலரவர்கட்குத் தோன்றாத் துணையாக நின்றது ஆறுமுகப் பெருமான் திருவருளொன்றே யாகும்; அந்தக் காலத்திலும் அரசினருடைய உதவி நாவலரவர்களுக்கு இல்லையாக, மிஷனரிமாருக்குக் கிடைத்ததென்பது அக்காலத்தில் நாவலரவர்கள் எழுதிய சில நூல்களைக்கொண்டு அறியலாகும்.

நாவலரவர்களைப் பின்பற்றிச் சில சைவக் கலாசாலைகளும் அக்காலத்திலும், பல கலாசாலைகள் பிற்காலத்திலும் ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகின்றன வென்பது நிசமெனினும், அக்கலாசாலைகள் அந்தப் பெரியார்கொண்டு நடத்திய தூயமுறையில் நடத்தப்படவில்லை யென்பது கவலைக்கிடமானது; இக்காலத்தில் இப்படியான தரும தாபனங்களை நிர்வகித்து நடத்துவோருட் சிலரொழியப் பலரிடத்தில் அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் முதலிய தருமத்திற்கு விரோதமான குணங்களும் செயல்களும் தலைப்பட்டனவாயின. தமக்குக் கருத்தில் வஞ்சனை குரோதம் சொறசோவு முதலிய தீய குணங்கள் தரும தாபனங்களின் பொறுப்பை ஏற்று நடத்துவாரிடத்துப் பிறக்குமானால், காலகதியில் அத் தாபனங்களின் கதி என்னுமோ யாமறியேம்.

மதக்கட்சியினரால் நடத்தப்படும் வித்தியாசாலைகளுட் பல அந்த அந்த வித்தியாசாலைக அதிகாரிகளால் வியாபார முறையில் நடத்தப்படுகின்றன வென்னுங் கருத்துப்படக் கல்வி மந்திரியார் அன்று எடுத்துக் கூறியுள்ளார்; அவர் சொன்னதத்தனையும் நிசம். இந்நாட்டில் உள்ள வித்தியாசாலைகளும் பல, வித்தியா பரிபாலனத்திற்கென்று தொடங்கக் கூட்டப்பட்டுள்ள சபை சங்கங்களாலும் சில தனித்தனி அதிபர்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன; இப்படியான சங்கங்கள் சபைகளுட் சிலவும், தனித்தனி அதிபர்களுட் சிலருமொழிய, ஏனைய சங்கத்தினரும் சபையினரும், தனித்தனியுள்ள அதிபர்களுட் பலரும் தம் பொறுப்பிலுள்ள வித்தியாசாலைகளை முழுவதும் வியாபார முறையிலேயே நடத்தி வருகிறார்க ளென்பது மிகையாகாது. வித்தியாசாலை மனேஜர்களிற் சிலர் தங்கள் பொறுப்பிலுள்ள பள்ளிக்கூடங்களைத் தங்கள் பெண் மக்களுக்கும் பேர்த்தியாருக்கும் சீதனமாகக் கொடுக்கிறார்கள் என்று எங்கள் கல்வி மந்திரியார் அன்று சொன்னார். அவர் சொன்னதற்குச் சான்றாகத் தேடி அதிகதூரம் போகவேண்டியதில்லை. நாமே மேலே எடுத்துப் புகழ்ந்து பாராட்டிய பெரியாரும் நைஷ்டிகப் பிரமசாரியும் அவதார புருஷருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அக்காலத்தில் மேலான நோக்கத்துடன் முதன்முதல் தாபித்துச் சைவமுறைப்படி நடத்தி வந்த யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையே இப்பொழுது அப்பெரியாருக்கு, அது வழியாற் பேர்த்தி முறை பூண்ட ஒரு தனித்த பெண்ணால் நடத்தப்பட்டு வருகின்றதென்றால், கல்வி மந்திரியார் சொன்னதற்கு வேறுந் திருஷ்டாந்தந் தேடவேண்டுமா? வித்தியாசாலைகள் பல வியாபார முறையில் நடக்கின்றன வென்று கல்வி மந்திரியார் முறையிட்டமை முழுவதும் உண்மையென்பதற்கு இன்னுஞ் சில ஏதுக்களை அடுத்த பிரசுரத்தில் எடுத்துக்காட்டுவாம்.

## திரு. ஆனேயின் காரியதரிசி

### திரு. விஸ்வநாதனுக்குப் பதவி மாற்றம்

இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக விருக்கும் திரு. எம். எஸ். ஆனேயின் காரியதரிசியான திரு. விசுவநாதன் ஐ. ஸி. எஸ். சாம்ராஜ்ய உறவு இலாகாவின் டெபுடிக் காரியதரிசியாகவோ அல்லது பர்மா அரசாங்கத்தின் பொதுஜனத் தொடர்பு அதிகாரியாகவோ நியமிக்கப்பட்டுப் புதுடில்லிக்கு மாற்றப்பட்டிருக்கிறாரென்று அறியப்படுகிறது.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர் — 6)

"தோழனோடும் ஏழைமை பேசேல்"

"மித்திரா, நீ எனது உற்ற நண்பனென்ற காரணத்தினால் உனக்கு உள்ளதைச் சொல்லிவிட்டேன்; நீ அதனை விபரீதமாக நினைத்துக் கொண்டு என்னைப் பெண்வீட்டுக்காரர் சொற்கேட்டு நடப்பவனென்றும் சுயபுத்தியில்லாதவனென்றுங் கருத்துப்பட எள்ளனஞ் செய்கின்றாய்;

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள்காண்ப தறிவு"

என்றபடி பெண்வீட்டுக்காரராக உன்னையொத்த உற்ற நண்பராக, உறவினராக, உபாத்தியாயராக, பெரியார் சிறியாராக, எவராக நீதியைச் சொன்னாற் கேட்டு நடக்க வேண்டியதுதானே முறை; நான் பழகாத பழக்கம் பழகி நடவாத நடை நடந்து கெட்டுப்போனால் என் பெற்றாருக்குப்போல, என் பெண் வீட்டாருக்கும் கவலை நேருந்தானே. எனக்கு வருஞ் சுகதுக்கங்கள் பிரதானமாக என் தாயாருக்கும் மாமன் மாமிக்கும் எனக்கென்று நியமித்திருக்கும் பெண்ணுக்கும் உரியவைகளல்லவா; நல்லபுத்தியை மாமன் வீட்டுக்காரர் சொன்னாரென்ற காரணம் பற்றிக் கொள்ளாது தள்ளிவிடச் சொல்லுகிறாயா? ........ [illegible] மந்திரி மதியும் - பேசில் இவையுடையாள் பெண்" என்றுதானே பாடப்பட்டிருக்கின்றது. உத்தம பத்தினிகள் தத்தம நாயகனுக்கு இடர் நேர்ந்த காலத்திலே தக்க உபாயஞ் சொல்லித் தேற்றி அந்த இடரையகற்றி வழிகாட்டியதைப் பாலசிங்கா, நீ கேள்விப்பட்டதில்லையோ? கௌசிக முனிவருடைய தூண்டுதலினால், [illegible] அரிச்சந்திர மன்னனைப் பொருள் தருமபடி [illegible], அந்த மன்னன் அச்சமயத்திலே செய்வதின்னதென்று தெரியாமற் கலங்கி நிற்க, "பிராணேசா, என்னை அடிமையாக விற்று முனிவருடைய கடனைத் தீர்த்துவிடுதிர்" என்று உற்ற இடத்தில் உபாயஞ் சொன்னவள் உத்தமியாகிய சந்திரமதியல்லவோ? அரசனும் உடனே அப்படியே செய்தல்லவா முனிவர் கடனையும் அந்தச் சமயத்திலே தனக்கு நேர்ந்த இடரையும் தீர்த்தான்; ஆனதால் பெண்புத்தியும் கேட்கத்தக்கதென்றே கேட்கத்தான் வேண்டும்; பெண்புத்தி கேட்பதுங் கேளாமலொழிவதும் அப்புத்தியைச் சொல்லும் உத்தமியிலேயே தங்கியிருக்கின்றது. ஆனதால் பாலா, அந்த விஷயத்திலே உன்னுடைய கொள்கை தவறாகும்; "தோழனோடும் ஏழைமை பேசேல்" என்ற வாக்கியத்தை மறந்து உனக்கு உற்றதைச் சொன்னமையினாற்றான் நீ என்னைப் பரிகசிக்கின்றாய்; அல்லாமலும், என் மாமனார் வீட்டுக்காரர் இற்றைவரையில் எனக்கு நேரில் ஏதும் புத்தி சொன்னாரல்லர்; என்து உபாத்தியாயர் சொன்ன சற்புத்தியைக்கேட்டே நான் அப்புத்தியின்படி நடக்கத் துணிந்தேன்; நீயும் மதுபானஞ்செய்தல் முதலிய தீய செயல்களை இன்றோடு அறவேயொழித்து, உன் குலத்துக்கும் பெயருக்குந்தக்க நடந்தால் உனக்கும் உன்னுடன் கூடித்திரியும் எனக்கும் அது பெருமையேயாகும்" என்று இதமாக மொழிந்தான் விசுவநாதன்.

"தையல்சொற் கேளேல்"

விசுவநாதன் சொன்னவைகளையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த பாலசிங்கன் சற்றுவேளை யோசித்தபடி யாதும் பேசாதிருந்துவிட்டுப் பின்னர், அவனைப் பார்த்து "நண்பா, நீ சொன்னவைகளை நான் மறுக்கவில்லை; உத்தமமான மனைவி வந்து வாய்த்துவிட்டால், அவளை மனைவியாகவுடையவனே பெரும் பாக்கியவான்; அப்படிப்பட்டவளுடைய சொல்லைக்கேட்டு நடப்பதனால் நன்மையேயொழிய ஒருபோதும் தீமை வராதென்பது நிசம்; ஒரு பெண் உத்தமியென்பதையும் அல்லளென்பதையும் அவள் கணவனிடம் வருமுன் அந்தக் கணவன் அறிந்துவிட முடியுமா? இதனால் உன் அம்மான் மகளை நான் உத்தமியல்லளெனச் சொல்லுகிறேனென்று கனவிலும் நினையாதே; அவள் மகா உத்தமியாயிருக்கலாம்; அப்படி இருக்கவேண்டுமென்பதே எனது விருப்பமுமாகும். நான் உலகத்துக்குப் பொதுவாக உள்ள நியாயத்தைத்தான் சொல்லுகிறேன்; நீ சொன்னவை முழுவதும் நிசமானால் தையல் சொற் கேளேல் என்று ஔவையார் சொன்னதற்கு நியாயமென்ன? "காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண் ஆய்தல் அறிவுடையோர் கண்ணதே-காய்வதன்கண், உற்ற குணந்தோன்றா உவத்தலின்கண், குற்றமுந் தோன்றாக்கெடும்" என்று நீயே முன்னர்ப் பலமுறை எனக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறாய்; மனம் ஒருவனிடத்திலே, இல்லையேல் ஒருத்தியிடத்திலே படிந்துவிட்டால், பின்னர் நியாயம் நடுவுநிலைமையென்பன அவன் விஷயமாய், இல்லையேல் அவள் விஷயமாகத் தோன்றாதல்லவா? உன் மைத்துனியின்மீது நீ வைத்த காதல் அவளளவில் நிற்பதோடு அமையாது, அவள் பெற்றாராகிய உன் மாமன் மாமியிடத்தும் அன்பையும் விசுவாசத்தையும் ஆக்கிவிட, நீ இப்பொழுது அவர்களெல்லோரும் நல்லவர்களென மதித்துக்கொண்டு உன் உற்ற நண்பனாகிய என்னைப் புறக்கணிக்கத் தலைப்பட்டுக்கொண்டாய்; பேய் சிரித்தாலும் பிழை அழுதாலும் பிழை யென்றபடி, இனி நான் உனக்கு நன்மையைச் சொன்னாலும் தீமையைச் சொன்னாலும் எதுவும் உன் செவியில் ஏறாது; இதனையிட்டுத்தான் உன் சிநேகத்தை இன்றோடு நான் விரும்பவில்லையெனகிறேன்; இந்த இரகசியத்தை நீயும் சற்றுமுந்தி உன்னையறியாமலே எனக்குச் சொல்லிவிட்டாய். உள்ளன்பிலாத பேர் நித்திக்கவே பேசி உறவாடும் உறவும் உறவாமோ? ஆனதால் விசுவநாதா, உனக்கும் எனக்கு மிடையேயுள்ள பாசம் இன்றோடு அற்றுப் போகட்டும்; இதனால் எனக்கு முனக்கும் எவ்வகையான பகையுமில்லையென்பதையும் மறந்துவிடாதே; நீ என்னுடன் சிநேகமாயிருந்தாலும் சரி, இல்லையென்றாலுஞ் சரி, எங்கிருந்தாலும் நீ நல்லாயிருக்க வேண்டுமென்பதே என்னாசை" என்று தன் முகத்திற் கவலை புலப்படச் சொல்லிவிட்டுச் [illegible] எழுந்து சென்றான் பாலசிங்கன். விசுவநாதனும் அவன் சொற்ற வார்த்தைகளால் மனங் கரைந்தானாய், "எங்கே போகிறாய் பாலா! கோபித்துக்கொண்டனையா; நில், நில்! நானும் உன்னுடன் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து, நிழல் தொடர்வதுபோல் அவனைத் தொடர்ந்து போனான்; விரைந்து சென்ற பாலசிங்கன் தன்னை விசுவநாதன் தொ

(தொடர்ச்சி ௩-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வெட்டு வசனம் 2

அ. வி. மயில்வாகனம், புத்தளம்

(முற்றொடர்)

கல்வெட்டுக்களின் வசனநடை அவற்றிற்கெனவே புறம்பாகத் தோன்றியது போலும். அவைகாலத்தனவாகிய ஏனைய இலக்கியங்களுள்ளேனும் பிறகாலத்தனவாகிய இலக்கியங்களுள்ளேனும் அந்நடை காண்டல் அரிது. சிற்பிகள் அக்கால வழக்குமொழியில் மாத்திரம் தோன்றிய பல சொற்களை எடுத்து ஆண்டிருக்கின்றனர். ஆகலின் இம்மொழி வடிவமே அக்காலத்தவர் பேசிய பாஷை என்று கூறிவிடக் கூடாது. ஏனெனில், இவை மிக நீண்டு தொடர்ச்சியற்ற பொருளுடையனவாகத் தோன்றுகின்றன. சொற்களைக் குறுக்கல், உச்சாரண மாற்றம், சொற்றொடர்ச் செம்மை முதலியன இக்கல்வெட்டுக்களுக்கே பிரத்தியேகமானவை. அ/ஓ, க/ய, ச/ச, ச/ப முதலிய எழுத்துக்கள் ஒன்றையொன்று மாறி இடம் பெறல் ஈண்டே குறிக்கத்தக்கது. உதாரணம்:— நந்தாவிளக்கு=நொந்தாவிளக்கு, பதிகம்=பதியம், உரோகிணி=உரோசணி, அரசன்=அரையன் etc என்பன அவை. போலி போன்றனவும் சில.

நாம் உச்சரிக்கும்பொழுது சில எழுத்துக்களை விழுங்கி விடுகின்றோம். பின்பு அவ்வுச்சரிப்பின்படியே அவற்றை எழுதும்போது தவறாக எழுதுகின்றோம். கல்வெட்டுக்களில் இவ்விதச் சொற்றொடர்கள் பலவுள. உம்:— நாள் + அன்று = நாளன்று நான்று. (P. 15-5) அரையன திருவாதிரை நான்று etc இனி சொன்முன் யகரம் தோன்றலும வேறிடத்துள் வகரவுடம்படு மெய்க்குப் பதிலாக வருதலும் உண்டு. உம்:—யெப்போ? யேன்? யிப்படிக்கு யென்று கல்லுர் யென்று, (T. K. C. இதயஒலி) என்பன அப்போதுபோல இப்போதும் சென்னையில் வழங்கி வருகின்றன.

வடமொழி வழக்கு இவற்றுள் மிதமிஞ்சி உண்டு. ஒரு கல்வெட்டேனும் வடமொழி விரவாதது இல்லை என்று திடமாகக் கூறிவிடலாம். மெய்க்கீர்த்தி புகழ்மொழி, பட்டம், வாழ்த்துரை முதலியன யாவும் சங்கத மயமாகவே யிருக்கும். அவற்றின் தொடக்கமே:— ஸ/வ ஸி/த ஸ்ரீ என்றிருக்கும்! சங்கதச் சொல்லுடன் நட்புப்பூண்டிருப்பது கிரந்த இலிபி. அதுவும் அதிகம் உண்டென்பது சொல்லாமலே தோன்றும். ஆனால், மணிப்பிரவாள வசனத்தைக் காட்டிலும் இது நன்று!

எண்கள் எல்லாம் தமிழ்முறை தழுவியே எழுதப்பட்டுள. உம்- 440க்கு, யாண்டுசுOகூபுதன்கிழமையும் etc இவைக நட்சத்திரம், மாசம், வருஷம், பட்சம் என்பன எல்லாம் தமிழ் வழக்கில் வந்திருத்தலின் வரிசை முறையில் ஆக்கல வழக்கிற்கு நேர் எதிராகத் தோன்றுகின்றன. மேலை நாட்டார் வழக்கு யேனினமாகச் செல்வது. உம்:- மணி, நாள், மாசம், வருடம் என இவற்றைத் தேசத்தார் மாறுகவே வழங்குகின்றனர். (உம—நாவலர் தேசகர் முதலியோர் பதிப்பு நூல்களுட் காண்க)

மணிப்பிரவாள நூல்களுள் நூற்றிற்கு ஐம்பது விகிதமாவது வடசொல் இருக்கும். கல்வெட்டுக்களுள் மெய்க்கீர்த்திப பாகத்தில மாத்திரம் அவ்விகிதம் காணலாகும். ஏனைய இடங்களில சொற்கள் இருமுங்குமாகக் காணப்படும். அவையும் தமிழ்மரபு தழுவியே மாறி வழங்குகின்றன. பழாரல பாண்டிய மன்னர் சாசனங்கள் இப்பெயர்ப்பட்டன. உம்:— தன் மக்கள் தண்டேசுரதேவர், திருச்சூலம், சக்கரவர்த்தி வியஞ்சனம் என்பன. இருந்தும், சிலவிடத்தில் பாண்டியன் என்னுஞ் சொல்லையே பாணன் என்று பிறிதோரிடத்தில் ஒரு சிலபி கொத்திவிட்டான்! முடிவாக இக்கல்வெட்டுக்களுள் வடமொழிக்கலப்பின் சராசரி விகிதம் பார்ப்பதானால் அது 15க்கும் 25க்கும் இடையிலதான் இருக்கும்.

இனி, இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்குமுன் ஒரு கருத்தொடு வழங்கிய சொல், இன்று வேறொரு கருத்தில் வழங்குவதையும் நாம் காண்கின்றோம். உம்:—ஊர், நகரம, நாடு என்ற இம்மூன்று சொல்லும் புதுக்கோட்டைச் சாசனத்துள் இடவாகுபெயராகவே வழங்கியுள. அன்றி, அவை பெயர்ச்சொல்லாகவே வழங்கப்பட்டில. சாசனத்துள் வருமுறை காண்க:— 'பெரிஞ்சிக்குடி ஊரார் இசைந்த ஊரோம்; தெங்கவீரநாட்டு நாடா இசைந்த நாடோம்; சுந்தர சோழ்புரத்து நகரமா இசைந்த நகரோம etc' இவ்வசனங்களுள தோன்றியுள்ள கடைசிச் சொற்களைப் பற்றியே எமது பேச்சு. இவை, அவ்வெறறிடங்களையேனும், முழுமாந்தரையேனும் குறிக்கவில்லை. அன்றிச் சட்டம பயின்றோரும் ஐம்பெருங்குழு, எண்பேராயம என்னுந் தொகுதிகளுட் சேர்ந்தாருமே இவை குறிக்கும் சிறு குழுவினர்! இப்படிக் கருத்து வேறுபாடும் இவற்றுள் நோக்கத்தக்கது.

திருவேந்திரம் கல்வெட்டுக்களும் சின்னமண்ணூர்ச் சாசனமும் மிகப் பழையன. அவற்றுள் வசனங்கள் மிகச் சிறியனவாகத் தோன்றுகின்றன. பின்னெழுந்தவற்றுள் வசனம நீண்டிருக்கின்றன. இவற்றை விளங்கிக்கொள்வதும் கடுமையாகவேயிருக்கும். eg. T. A. S. Vol I. P. 231—3— இவற்றுள பல்லவர் காலத்தன பெரும்பாலும வட்டெழுத்துக்கள். உம்:—360 A. D. ஐம்பத்தேழனசனக்கோற்ற சந்திர கதி ஆசிரிகர் நீஷீந்கை 650 A. D. பகாப்படுகுலளிதாங்குரன சத்துருமல்லன் குணபரன் etc.

சோழவரசருடையவாகிய அதிக சாசனங்களில் இ, ஊ என்னும எழுத்துக்கள் அருமையாகவே காணப்படும். ஆனால் இவற்றிற்குப் பதிலாக இ, உ, என்னும் குறிலகளே வழங்கியுள. உம்: 41-1. 35 கிழ்ப்பாற்கெல்லை. (கி)34 காதெஞர்ச்சாலை; (ளு 15, 16, ஆமுர்க்கோட்டம (மு) 33 ஏகதிரன (தீ) என்று இப்படியாகப் பலப்பல உள.

இவையும் எழுதும் எளிமை கருதியோ பேச்சுமுறை தழுவியோ இச்சாயலை எடுத்திருக்கின்றன. இனி, பழந்தமிழ் வழக்கில் (ஈ) யையும் காணமுடியாது. அதற்குப் பதிலாக (இ) தான் இருக்கும். சுழிசுழிககாவிடத்து அதுவும் குறுகியே கொள்ளும்.

அடுத்து மேற்செல்வோம்.

## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

# நாட்டமிகு தண்டி

(தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான்,
திரு. வை. மு. சண்முக தேசிகரவர்கள், நாகை)

கண்ணார் மணியொன்று மின்றிக்
கயிறுபிடித் தாற்குத்
தண்ணார் புனற்றடந் தொட்ட
லுந் தன்னை நகுமமணர்
கண்ணுங் கிழப்ப வமணர் கலங்
கக்கண் டம்மலர்க்கண்
விண்ணு யகனிடைப் பெற்றவ
ளூரர் விறற்றண்டியே''

நாட்டமிகு தண்டி என்னும் தொடர்மொழி, நம்பியாரூரர் "ஏ'ல முய்ய நாமுய்யச் சைவநன்னெறியின் சிலமுய்ய" திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகை 5-வது செய்யுளில 6 வது அடி முற்பகுதி.

ஆரூருடைய நம்பிகள் திருத்தொண்டத்தொகையில அடியார்களின் பெயர்களை அடைமொழி இன்றிக் கூறுவர். சில அடியார்களின் பெயர்க்கு அடைமொழிகொடுத்துக் கூறுவர். அவ்வடைமொழியில் அடியாரது தொண்டைப்பற்றிய குறிப்புக் காணப்படும். அவ்வாறே "தண்டிக்கும் அடியேன்" என்று கூறாமல் "நாட்டமிகு தண்டிக்கும் அடியேன்'' என்று கூறியதிலிருந்து இவர் பிறவிக் குருடராயிருந்து திருவாரூர்த் திருக்கோவிலின் மேற்றிசையில் ஓர் திருக்குளம் (கமலாலயம்) தொட்டு அதனால் முழுக்கண்ணொளி பெற்றனர் என்ற குறிப்புப் பெறப்படுகின்றது.

தண்டியடிகள் முற்பிறப்பிற் செய்த வினையின் பயனாற் திருவாரூரிலே கண்ணொளியின்றிக் குருடராய்த் திருவவதாரஞ் செய்தருளினார். சில்லாண்டுகள் கழித்து இவர் பிறவி யெடுத்தபயனைப் பெறுவான வேண்டிச் சிவத்தொண்டு செய்ய விழைந்தார்.

மக்கட்கு ஓர் அகக்கண்ணும் இரண்டு புறக்கண்களும் இருக்கின்றன. அகக்கண்ணை ஞானக்கண் என்றும், புறக்கண்ணை ஊனக்கண் என்றும் கூறலாம். அகக்கண் பெற்றவர்க்குப் புறக்கண் தேவையில்லை. அகக்கண் பெறாதவர்க்குப் புறக்கண் தேவை. இதுபற்றித்தான் முனிசிரேஷ்டர்களும் புறக்கண்ணை மூடி அகக்கண்ணால் ஆண்டவனை அறிந்து மகிழ்கின்றனர் போலும். அகக்கண் ஆண்டவனது அழகிய திருமேனியைக் கண்டு களித்தற்கு வழியாகின்றது. புறக்கண் உலகியலைக் காண்பதற்கு ஏதுவாகின்றது. புறக்கண்ணாலும் ஆண்டவனைக் காணலாம். ஆரூருடைய அரசர் திருஅங்கமாலையிற் கூறியவாறு புறக்கண் கண்ணுதற்கடவுளின் கழலினைக் காணுமாயின், பயன் உற்றதாம். கண்பெற்றபயன் கடவுளையும், கடவுள் ஆலயங்களையும் காண்டலே. "கண்ணைப்பெற்ற பயனே..." "கண்ணுதலாலயம் நோக்குக ..... கண்காள்'' என்னும் ஆரூரர் அமுத மொழிகள் இதனை வலியுறுத்தும். திருவள்ளுவர் "கண்ணுடையர் என்பவர் கற்றோர்'' என்று கூறியதனை நோக்கின ஆண்டவன் அடியை அறிந்து கண்ணால் அறிந்தற்ற கல்வியைக் கற்றவர்களே கண்ணுடையவர் என்பது விளங்கும்.

தண்டியடிகள் நாடோறும் காலையில நீராடிச் சிவசின்னங்களைத் தரித்து நாவினுக்கு அருங்கலமாகிய நமசிவாயப் பதிகத்தை உச்சரித்துக்கொண்டு ஆரூர் ஆலயத்துட் சென்று அடியார்கள் ஒருவர்க்கு ஒருவர் தேவாசிரிய மண்டபத்தைத் ..... வணங்கி வலம்வந்து ...... காலத்தில ஆரூரில் ...... புறமான அமணர் பாழிகளும், பள்ளிகளும் அதிகரித்திருந்தன. அமணர்கள் தங்கள் பாழிகளைத் திருக்குளத்தின் கரையைச்சுற்றி அமைத்துக்கொண்டிருந்தனர். தண்டியடிகள் ஓர்நாள் அக்குளத்தை அகலமாகவும் ஆழமாகவும், அமைக்கவேண்டுமென்று ஆர்வங்கொண்டார். அடிகள் குருடராதலின் குழியில் ஓர் முளையை நட்டு அதிற் கட்டிய கயிற்றைக் குளக்கரையின் புறத்து ஓர் தறியை நட்டு அதனுடன் பிணைத்து அக்கயிற்றைத் தடவிப் பிடித்துக்கொண்டேவந்து தடத்தில் மண்ணைக் கல்லி எடுத்து முடியிற் றாங்கி மீண்டும் அக்கயிற்றைத் தடவிப் பிடித்துக்கொண்டு சென்று புறத்தில் கொட்டுவார். அப்பொழுதும் எப்பொழுதும் சிவசிந்தனை மறவாமல அஞ்செழுத்தை ஓதிக்கொண்டேயிருப்பர். இவ்வாறே மீண்டும் மீண்டும் தளராத ஊக்கத்தோடு திருக்குளம் வெட்டும் திருத்தொண்டைச் செவ்வனே செய்து வந்தார்.

இவர் இவ்வாறு செய்யும் செயலைக்கண்டு மனம் பொறாத அமணர்கள் இவரிடம்வந்து "நீர் மண்ணைக் கல்லிப் பிராணிகளை வருத்தவேண்டாம்'' என்றனர். தண்டியடிகள் அவர்களை நோக்கி "திருவிலிகாள்! சிவபெருமானுக்காகச் செய்யும் பணி குற்றமில்லாத அறமாகும் என்பதை அறியீர்'' என்ன, அவர்கள் 'யாங்கள் செப்பும் அறத்தைக் கேளாத கட்புலனை இழந்ததோடல்லாமல் செவிப் புலனையும் இழந்தாயோ?' என இகழ்ந்தனர். அடிகளார் "மந்த உணர்வும், விழிக்குருடும், கேளாச்செவியும் உங்கட்கே பொருந்துக. யான இறைவன சேவடியைக்காண்பதல்லது வேறொன்றையுங் காணேன. அது உங்கட்கு எவ்வாறு தெரியும். உங்கள் கண்கள் குருடாய்ப் போகவும், என்கண்கள் ஒளியைப் பெறவும் செய்தால என் செய்வீர்'' என்றனர். அமணர்கள் அதட்டுழுங்கி 'நீ அவ்வாறு செய்யின் இவ்வூரைவிட்டுச் சென்றுவிடுவோம்' என்று கூறி அவர் வைத்திருந்த கூடை முதலியவைகளைப் பறித்தெறிந்து கயிறுகளையும் அறுத்துத் தள்ளினர்.

பின்னர், தண்டியடிகள் மைகொள் கண்டர் பூங்கோயில் மணிவாயிலின்முன் வந்து விழுந்து இறைஞ்சி 'ஐயனே இன்று அமணர்கள் என்னை அவமானஞ் செய்தார்கள். அவ்வருத்தந்தீர அடியேற்கு அருள் செய்தல் வேண்டும்' என்று விண்ணப்பித்துத் திருமடஞ் சென்று நித்திரை போயினார். வேண்டுவார் வேண்டுவதே விரும்பி ஈயும் வித்தகர் கனவிற் றோன்றி 'அன்பனே! நீ வருந்தற்க; நாளை நின் கண் விழித்து அந்த வஞ்சக அமணர்களது கண் மறையுமாறு செய்கின்றோம்' என்று அறிவித்து, அவ்வூர் அரசனுடைய கனவிலும் தோன்றி 'அரச! நமது தொண்டனாகிய தண்டி நமக்குத் தடாகம் வெட்டுவதைக்கண்ட அமணர்கள் தரியாது அப்பணி செய்யாதவாறு தடுத்துவிட்டனர். நீ சென்று உடனிருந்து அவர் கருத்தின்படி பணியைத் தடையின்றி முற்றுவிப்பாய்' என்று கூறி மறைந்தருளினர்.

பொழுது புலர்ந்தது. வேந்தன் அடிகளையடைந்து இறைவன் தமக்குக் கனவில் வந்து அருளியவற்றைக் கூறி, அமணர்கள் செய்த தன்மையையும் கேட்டு அறிந்தான். சமணர்களை அழைப்பித்து அடிகளை

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத்தமிழரின் சமயம்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

ஒவ்வொரு பொருளிலும் கடவுள் அந்தரியாமியாய் விளங்குவதை எல்லாராலும் தெரிந்துகொள்ளுதல் முடியாது. இருந்தும் அவர்களுக்குத் தெரியாமலே கடவுளின் அருளில் திளைக்கின்றனர். இது எதுபோலெனின், ஒரு சிறு பூச்சியானது சுகாதார நிலையத்திலுள்ள காற்றைத் தான் இன்னதென்றறியாமலே சுவாசிப்பதுபோலாம். இப்படிச் சிறுகச் சிறுகக் கடவுளின் அருளை நுகர்வதால் ஆன்மாக்கள் படிப்படியாக மேல் நிலைக்கு வருகின்றன. பாவனைகளால் உயிருள்ள பிராணிகள் அடையும் பயன் வெளிக்குத் தோற்றுவதில்லை. பல வியாதிகள் சிறு பூச்சிகளால் உண்டாவதை யாம் வெளித்தோற்றத்தால் அறியக்கூடாமல் இருப்பது எல்லோரும் அறிந்ததே.

இப்பாவனையால் உயிர்களுக்கு உண்டாகும் பலன் நுண்ணியதாகலின் அதனை வெளிப்பார்வையில் அறிதல் கூடாது. இப்பாவனை ரூபங்களிலுள்ள கடவுளின் அருள் சித்சொரூபமாதலின் அதனால் யாம் பெரும் பிரயோசனத்தை அடைகின்றோம். இப்படிக் கடவுளின் அருளைச் சிறுகச் சிறுகப் பாவனா ரூபமாக உயிர்கள் பெற்றபின் அவைகளுக்கு அறிவு வளர்ச்சிபெற்றுக் கடைசியில் கடவுளைக் காணக்கூடிய சக்தியைப் பெறுகின்றன.

கீழ்த்தரமான உயிர்கள் பாவனையை இன்னதென்று அறியாதிருப்பினும் அதனால் ஆவதற்றுப் பலன் உண்டு. அவ்வுயிர்கள் மேல் நிலைக்கு வந்து மனித உருவமடைந்து உணமைச் சமயத்தை அறிந்து அதற் சொல்லியபடி நடந்தாலன்றிப் பாவனை இன்னதென்று விளங்கிக்கொள்ள இயலாது. பாவனையை விளங்கிக் கொண்டால் கடவுளின் அருளில் மூழ்கக்கூடிய வருவார்கள்.

கடவுள் நல்லவர். மேல் உலக இன்பத்தை அனுபவிப்பதற்கு மனிதனும் நல்லவனும் மாறிக்கட்டுப்பட்டியுடையவனும் வேண்டும். அதாவது கடவுளைப்போல மனிதனும் நல்லவனாக வேண்டும். தமிழர்களின் சமயத்தில் கூறப்படும் சிவோகம் பாவனை ஆகும் விளக்குவதாகும். மனிதன் கடவுளாக வேண்டியதன்று. கடவுளைப்போல ஆதல் வேண்டும். உயிரின் தன்மை பண்புகளை ஒத்திருப்பதால் சிவோகம் பாவனையால் அதாவது உயர்கள் தம்மைச் சிவமாகப் பாவிப்பதால் கடவுளைப் போலாகும். கிரியைகளும் வழிபாடுகளும், இயமங்களும் நியமங்களும் ஆன்மா உண்மை நிலையைப் பெறுவதற்கு ஏற்ற சாதனங்களாம். சுவோகம் பாவனை மூலமாகத் தாங்கள் கடவுளாகிவிடுவதாக நினைப்பவர்கள் ஒன்றும் உணர்ந்திலர். சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று மார்க்கங்களுக்கும் அமைக்கப்பட்டுள்ள கிரியைகளின் உட்கருத்துக்களை எவரேனும் ஆராயவருவாராயின் அவர்களுக்குப் பாவனைகளின் உண்மை விளங்கும்.

நமது கோயில்களும், அவற்றிலுள்ள கோபுரம் மண்டபம் முதலியவைகளும், அக்கோயில்களில் நடக்கும் பூசை உற்சவம் முதலியவைகளும் உயிர்களின் நன்மைக்காக ஆழ்ந்த கருத்துடனே ஏற்படுத்தப்பட்டவைகளாம்.

### தமிழர் தங்கள் சமயத்தால் அடைந்த பலன்

சமயமானது ஆன்ம அனுஷ்டிப்பவர்களுக்கு நன்மை விளைப்பதற்கு ஏற்பட்டதாகும். சமய அனுஷ்டானத்தால் ஆன்ம ஈடேற்றமும் லௌகிக விருத்தியும் உண்டாவதியல்பு. ஆனால் ஆன்ம லாபத்திற்கு உலகப்பற்று பேரிடையூறாக நிற்பதை யாம் அறிவோம். இப்படியிருக்க எப்படி ஆன்ம ஈடேற்றமும் லௌகிக விருத்தியும் சமயத்தால் உண்டாகும் என்னும் கேள்வி பிறக்கும். இதற்குத் தக்க சமாதானம் தமிழர்களின் சமயத்திலுள்ளது.

தமிழர் சமயத்தின்படி மனிதன் வாழ்க்கை இரண்டு பிரிவினையுடையது. இல்லறம் அல்லது இவ்வுலக வாழ்க்கை துறவறம் அல்லது மேல் உலக வாழ்க்கை,

இல்லறத்தை விரும்புவர்களுக்கு அச்சமயம் அவர்கள் அடைய வேண்டிய லௌகிகப் பயனுக்குத் துணைபுரிகின்றது. இதனால் அவர்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஒருவித துன்பமும் நேரிடுவதில்லை. ஆன்ம சுகத்திற்கேற்ற சித்தமிலைப் பெறுமுன் மனிதனிடமுள்ள உலகப்பற்று முற்றும் அனுபவித்துத் தீரவேண்டும். மேலுலக அனுபவம் இவ்வுலகத்தின் மூலமாகப் பெறவேண்டும். ஞானோதயத்திற்கு இவ்வுலக அறிவு முதற்படியாக நாகும். மனிதன் இவ்வுலகவாழ்க்கையில் கருத்து ஈடுபட்டு அதை வெறுத்து மேல் உலக வாழ்க்கையை விரும்புவானாகில் அவன் துறவறத்தை மேற்கொண்டவனாகின்றான்.

மனிதனுடைய ஆசை இவ்வுலகத்தைப் பொறுத்தமட்டும் அளவாக இருப்பின் அவன் அதனை அனுபவித்துப் பிறகு மேலவழிக்குப் போகலாம். அவனுடைய உலகப்பற்று அளவு கடந்து போனால் அவன் சமய வரம்பைக் கடந்தவனாகின்றான். சமயத்தைக் கடவுள் ஏற்படுத்தியிருந்தும் அதனை அனுசரியாத குறை மனிதனிடத்துள்ள மலபந்தத்தாலுண்டாயதாம். அம் மலசக்தியால் அவன் சமயத்தை மீறி நடக்கின்றான்.

தமிழர்களின் பூர்வ சரித்திரத்தை ஆராய்ந்தால் அவர்கள் தங்கள் சமயத்தால் அடைந்த நன்மைகளை உணரலாம்.

தமிழர்கள் தெய்வ வழிபாட்டிற் சிறந்தவர்களென்பது அவர்கள் நாட்டிலுள்ள எண்ணிறந்த கோயில்களாலும் அக்கோயில்களில் அவ்வப்போது நடக்கும் உற்சவங்கள் பூசைகள் முதலியவற்றாலும் அறியலாம். தமிழர்களைப்போல வேறெந்த வகுப்பினரிலும் இத்தனை மெய்யடியார்களில்லை. அவர்களுக்குள்ள சமயநூல்களைப்போல மேலான நூல்கள் வேறெந்தச் சாதியினரிடமும் இல்லையென்லாம். அவர்களது தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகிய அருட்பாக்களுக்குச் சமமான உண்மை நூல்களில்லை இவ்வுலகத்தில் என்று திட்டமாய்க் கூறலாம்.

தமிழர்கள் சாந்தம், இரக்கம் ஈகை, தயை முதலிய குணங்களிற் சிறந்தவரென்பது தமிழ நாட்டிலுள்ள பல தர்மசாலைகள் காட்டாநிற்கும். Dr. Coldwell தமிழரைப்பற்றிக் கூறுவதாவது:- தமிழர்கள் கிரீக்ஸ்காச் முதலிய மேலைதேசத்தவர்களுச் சமமானவர். இருதுக்களில் விடாமுயற்சியிற் சிறந்தவர்களும் துரூட்டு நம்பிக்கையிற் குறைந்தவர்களுமாவர். அவர்களுடைய புராதன நாகரிகமே அவர்களுடைய மேன்மையைக் கூறும். இப்போதும் அவர்கள் தன்பட்ட வாழக்கூடியவர்.

## நாட்டமிகு தண்டி

3.ம் பக்கத் தொடர்ச்சி

யும், அமணர்களையும் தடாகக் கரைக்கு அழைத்து வந்து தண்டியடிகளைப் பார்த்துத் "தாங்கள் கண்பெறுமாற்றைக் காணவேண்டு" மென்றுவேண்ட, அடிகள் கமலாலயத்தில் இறங்கி, "எய்ந்த அடிமை சிவனுக்கு யானென்னி லின்றென் கண்பெற்று, வேந்தனெதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார், ஆய்ந்தபொருளுஞ் சிவபதமே யாவது" என்று அஞ்செழுத்தை எடுத்தோதி மூழ்கினார். மூழ்கி யெழும்போது கண்ணொளி பெற்றெழுந்தார். அமணர்கள் கண்ணொளியற்றுத் தடுமாறினர். அதுகண்ட அரசன் அமணர்களை ஊரை விட்டுத் துரத்தி விடுமாறு கட்டளையிட்டான்.

அமணர்கள் அனைவரும் ஆரூரை விட்டு அகன்ற பின்னர், அரசன் அமண் பாழிகளையும் பள்ளிகளையும் அடியோடு அழித்துக் குளத்தை அகலப்படுத்தி அழகிய படிக்கட்டுகளையும் அமைத்துத் தண்டியடிகளின் காட்டாமையைத் தன் சென்னியாலவணங்கி ஆரம்மனைக்கு ஏகினர், அடிகளும் சின்னாட்கள் சிவத்தொண்டு செய்து சிவப்பேற்றைப் பெற்றனர்.

இச்சரிதத்திலிருந்து நாம் அறிந்து கொள்வன:- மானுடப்பிறவியெடுத்ததன் பயன் அரன்பணி செய்ய வேண்டும். அப்பணியும் மனவுறுதியோடு செய்யவேண்டும். அவ்வாறு செய்யும் தொண்டிற்கு எத்தகைய இடையூறுகள் நேர்ந்தபோதிலும் விடாது நடத்த வேண்டும். சிவத்தொண்டினால் எத்தகைய துன்பத்தையும் போக்கிக் கொள்ளலாம். சிவனடியார்களை இகழ்பவர்களும், சிவத்தொண்டிற்கு இடையூறு செய்பவர்களும் தீமையை யடைவார்கள். அன்புடைத் தொண்டர்க்கு இறைவன் எளிவந்து அருள் செய்வன. சிவசின்னங்களை யணிந்துகொண்டு சிவபஞ்சாக்கரத்தை முப்போதும் செபித்தல் வேண்டும். சிவபஞ்சாக்கர மகிமைச் செம்மையினைச் சிறந்துணர்தல், எனபன பலவாம்.

—ஞானசம்பந்தம்.

---

அவர்களுடைய பெருமைக்கு அவர்கள் பாஷையே சாட்சி. Rev. P. Percival தமிழ்ப் பாஷையைப் பற்றிக் கூறுவதாவது:—

சுருக்கமாகவும் விளக்கமாகவும் தத்துவ ஆராய்ச்சி முதலியவற்றை எடுத்தியம்புவதில் இப்பாஷைக்கு நிகரில்லையென்பதாம். செய்யுளைப் பற்றி Dr. Winslow சொல்லுவதாவது:—கிரீக், லத்தீன் பாஷைகளைக் காட்டிலும் தமிழ்ச் செய்யுள் சிறப்புற்றதென்பதாம். Charles E Gom தமிழ் இலக்கியம் உலகத்திலுள்ளவற்றில் சிறந்ததென ஒப்புக்கொள்கின்றார்.

தங்கள் சமயத்தால் தமிழர்கள் அடைந்த மேன்மையைக் கூறினும் அவரது பழக்க வழக்கங்களில் சில குறைபாடுகள் காலாந்தரத்தில் வந்து புகுந்துவிட்டன. அவற்றை நீக்கப் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டியது அறிஞர் கடன்.

(தொடரும்)

## அரிசி கொண்டுவந்தவருக்கு அபராதம்

பெர்மிட் இல்லாமல் 5 டிக்கட்டு அரிசி கொண்டுபோனதாக மெட்டெக்கெண்டை வாசியும் புகையிரத இலாகாவிலிருந்து ஓய்வு பெற்றவருமாகிய ஒருவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்துக் கிராமப் பெண்ணின் அல்லோல கல்லோலம்

அந்தோ அகதி நான் என்செய்வேன்

ஒருநாட்காலை யான் வயல் வெளியில் உலாவிக்கொண்டு வருகையில் திடீரென "அந்தோ அகதி நான் என் செய்வேன்" என்ற சத்தம் கேட்டது. திடுக்குற்றேன். அங்கும் இங்கும் பார்த்தேன். ஓர் கைம்பெண் இருந்து புலம்புவதைக் கண்டேன். அம்மா அம்மா என்று பல முறை கூவியும் திரும்பிப் பகர்ந்தனள் அவலன். இறுதியில் அருகிற் சென்று "ஏன் அம்மா புலம்புகின்றீர்கள்?" என்று உரத்துக் கேட்டேன்." மகனே! என் செய்வது ஏக்கருக்கு 4 புசல் நெல்லுக் கொடுக்க வேண்டுமாம். ஆக எனக்கு உள்ளது 25 பரப்பு. அதில் விளைந்த நெல்லு 15 புசல்தான். எனக்கும் என் பிள்ளைகள் இருவருக்கும் ஆறு மாதத்திற்குக் கூடக் காணாது. விதைநெல்லு என்ன? வண்டியுடன் கூலி என்ன. இப்படியெல்லாம் இருக்க அரசாங்கம் இப்படிக் கேட்பது நீதியாகுமா? என்றெல்லாம் தடதடத்துக் குரலிற் கூறினள். பின் பும் தொடர்ந்து புசலுக்கு ஆறு ரூபாவாம். அதுவும் இப்போது இல்லையாம். வண்டிற் கூலி என்ன. கூலியாளின் நாட்சம்பளமென்ன, எருவின் விலையென்ன? இப்படியெல்லாம் செலவழித்துச் செய்ய 10 ரூபாவுக்குமேற் பிடிக்கிறது. என் செய்யலாம் என்று புலம்பினள். இவையெல்லா வற்றையும் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு மிகவும் துக்கமும் வெட்கமும் ஏற்பட்டன். யாழ்ப்பாணத்துக் கமக்காரன் படும் கஷ்டத்தை யோசித்துத் திட்டம் வகுப்பதற்குற்ற விஷயந்தான். வாலிபருங்கள் யான் ஏதோ இது விஷயத்திற் சிரத்தை எடுக்கின்றேன்.

நம நாட்டுப் பெரியோர்களே! நமமைக் காக்க முன்வரத் தக்கவர்களே! விழுமின் எழுமின்!

1. எந்த ஒரு கமக்காரனும் தனக்கும் தனது பராமரிப்பில் உள்ளவர்களுக்கும் ஒரு அறுவடையில் கிடைத்த நெல்லில் 50 புசலுக்கு அதிகமாக வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார் என்பது நெல்வரவு கட்டுப்பாட்டுத் திட்டத்தில் அடங்கிய சட்டம். இலங்கையின் ஏனைய பகுதிகளிற் கமஞ் செய்பவர்களுக்கு இஃது எத்துணை வாய்ப்பான திட்டம். சிந்தியுங்கள்!

2. செலவு விஷயத்தில் யாழ்ப்பாணத்திற் கமக்காரர்படுங் கஷ்டத்தை அறிந்திருந்தும் நம் அரசாங்க சபை அங்கத்தவர்கள் மௌனஞ் சாதிப்பது எதற்காக? அவசர கால மானாலும், ஆய்ந்தோய்ந்து செய்ய வேண்டாமா? தர்மமுறை இன்னது என்பதைச் சிந்தித்து நடவுங்கள்!

இங்ஙனம்,

மானிப்பாய் "தாசன்"

---


## விளம்பரம்

### இராமநாதன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.

இவ்வாசிரிய கலாசாலைப் பிரவேச பரீக்ஷையிற் பிரவேசிக்க விரும்புவோரின் நேர்முகப்பரீக்ஷை நிகழும் 1944ம் ஆண்டு யூன் மாசம் 21ந் திகதி காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். வருவோர் 1.1-45 ல் 18 வயசுக்கு மேற்பட்டவரா யிருத்தல் வேண்டும். பின்வருவனவற்றை அவர்கள் கொண்டு வருதல் வேண்டும்:.

1. S. S. C. தராதரப் பத்திரம்.
2. பிறப்புக்கொப்பி (B Form).
3. ஒழுக்கத்தைக் குறிக்கும் இரு யோக்கியதா பத்திரங்கள்.

ஸ்ரீமதி A. மயில்வாகனம்,
பிரதமாசிரியை.
இராமநாதன் ஆசிரிய கலாசாலை,
9-6-44.

Mis 49 12 & 15-6 44


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்திஜீக்குச் சாஸ்திரியாரின் கடிதம்

### செய்தித் தணிக்கை பற்றிப் பம்பாய் அரசாங்கத்தின் அறிக்கை

பம்பாய் யூன் 8—

சென்னை மிதவாதத் தலைவர் திரு. டி. ஆர். வெங்கட்டராமசாஸ்திரியார் இன்று மாலை ஜுஹுவில் மகாத்மாவைப் பேட்டி கண்டு அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

அவர் மகாகனம் சாஸ்திரியாரிடமிருந்து காந்திஜிக்கு ஒரு செய்தி கொண்டுவந்து கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

காந்திஜியின் தேகநிலைபற்றித் திரு. டி. ஆர். வி. சாஸ்திரியார் மகாகனம் சாஸ்திரியாருக்கு எழுதுவார், அதைப் பார்த்துக்கொண்டு இப்பொழுது செய்யலாம் எனத் தோன்றினால், பிறகு மகாகனம் சாஸ்திரியார் அரசியல் விஷயமாகக் கடிதப் போக்குவரத்தைத் தொடக்கக்கூடும்.

காந்திஜி எழுதிய கடிதத்திற்குச் சாஸ்திரியாரிடமிருந்து இன்னும் பதில் வரவில்லையென்று தெரியவருவதாக ஏ. பி. நிருபர் கூறுகின்றார்.

இன்று திரு. டி. ஆர். வி. சாஸ்திரியார் காஷ்மீர் செல்லுகிறார். அங்கு அவர் ஸேர். சாப்ரு ஜினா ஆகியோரைச் சந்திக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

### டாக்டர் ராய் வருகிறார்

பம்பாய் யூன் 6—

காந்திஜி நேற்றுப் பூரண மௌனவிரதம் அனுஷ்டித்ததால தேக நிலைமையில் திருப்திகரமான அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகக் காந்தி கிராமத்தில் விசாரித்ததிலிருந்து தெரியவருகிறது. இரத்த அழுத்தத்திலும் மேற்கொண்டு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதாம்.

டாக்டர் கஜ்ஜார் செய்துவரும் இரத்தப் பரிசோதனையின் முடிவு தெரிந்ததும் தான் அவர் எந்தச் சிகிச்சை முறையை மேற்கொள்ள வேண்டுமென்பது நிச்சயமாகுமாம்.

காந்திஜி இன்னும் மிகப் பலஹீனமாகவே இருப்பதாயும் இரத்தப்புஷ்டிக் குறைவு அப்படியே இருக்கிறதென்றும் அரசியல் விஷயமாகப் பேசுக வார்த்தைகள் நடத்தத்தக்க சக்தி அவருக்கு இன்னும் ஏற்படவில்லையென்றும் டாக்டர்கள் சொல்லுகின்றனர்.

டாக்டர் பி. ஸி. ராய் வெள்ளிக்கிழமையன்று வந்து சேருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறார். டாக்டர் ராய் வந்ததும், டாக்டர்கள் கில்டர், சுசீலா, நாயர், கஜ்ஜார் மேத்தா, கதுபாய் பட்டேல ஆகியோர் காந்திஜியின் தேகநிலையைப் பூரணமாகப் பரீட்சை செய்வர்.

இந்தப் பரீட்சையின் முடிவிலிருந்துதான் காந்திஜியின் எதிர்காலத் திட்டம் நிர்ணயமாகும்.

காந்திஜிக்கு டாக்டர் ராய் சிபார்சு செய்த விசேஷ மருந்து வந்து சேர்ந்துவிட்டது. சென்னையிலிருந்தும் மங்களூரிலிருந்தும் பற்பல மருந்துகள் வந்து சேர்ந்தும், காந்திஜி சிகிச்சையை ஆரம்பிப்பாரெனத் தெரிகிறது.

### இன்றுமுதல் மருந்து

டாக்டர்கள் இன்று புஜங்களைப் பரீட்சித்தார்கள். அவருடைய தேகநிலையில் எவ்வித மாறுதலும் இல்லையென்றும் அவ்வருத்தி அடைந்து கொண்டிருப்பதாயும் தெரிகிறது.

கொக்கப்புழு நிவிர்த்திக்காகக் காந்திஜி நாளையின்று முதல் மருந்து சாப்பிட ஆரம்பிப்பார்.

## முப்பது வருடங்களாக இல்லாத பெரு வெள்ளம்

### தென் மாகாணத்திற் பிரவாகத்தாற் பலத்த சேதம்

காலி, மே 20

(தணிக்கை அதிகாரிகளால் தாமதமாக்கப்பட்டது)

இவ்வாரம் தென் மாகாணத்தில் ஒரு பெரிய வெள்ளப்பெருக்கெடுத்ததன் பயனாக நான்கு பேர் உயிரிழந்தனர். மாகாணத்தின் பல பாகங்களிற் பலத்தசேதமும்பெரும் கஷ்டமும் ஏற்பட்டது. இப்படிப்பட்ட வெள்ளமொன்று சென்ற முப்பது வருடங்களுக்குள் இங்கு ஏற்பட்டதே கிடையாதென்று பொதுவாகக் கூறப்படுகிறது.

நெல்வயல்களுக்கும் பாக்குத் தோட்டங்களுக்கும் கிழங்குப் பாத்திகளுக்கும் பெருஞ் சேதமேற்பட்டதுடன் அநேகக் கணக்கானோர் வீடிழந்து விட்டனர். பெருந்தொகையான வீடுகள் தகர்ந்துவிட்டன, அல்லது ஆழ்ந்துவிட்டன.

### 80 சதவீதம் பயிர்ப்பச்சை நாசம்

இந்த வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றிய சரியான புள்ளி விபரங்களாவது இன்னும் கிடைக்கவில்லை. ஆனால், வெள்ளப்பிரவாகத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள ஹினிதும்பற்றுவில் 80 சத வீதமான பயிர்பச்சைகள் நாசமாகிவிட்டனவென உத்தேசமாகக் கூறலாம்.

கிலவளகங்கை கனகங்கை ஆகிய ஆறுகள் ஊற்றெடுக்கும் பகுதியிற் பலத்த மழை பெய்த காரணத்தினாலேயே இந்தப் பிரவாகமேற்பட்டது. கிராமங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுப் பாதைகளெல்லாம் பூரணமாக ஆழ்ந்துவிட்டன. இதனால், நிவாரண வேலையில் ஈடுபட்டவர்கள் தோணிகளிலதான் அந்தந்த இடங்களுக்குச் செல்லவேண்டியிருந்தது.

மொரவக், வெலிகம், கோரளைகளிலும் ஹினிதும்பற்று, கங்கபோட்டபற்று ஆகிய இடங்களிலுந்தான இந்த வெள்ளத்தாற் பெருவாரி சேதமேற்பட்டிருக்கிறது.

---

## அதிக லாபத்துக்குக் கற்பலகை விற்றதாக வழக்கு

### எதிரிக்கு ரூ. 200 அபராதம்

ஒருகற்பலகையின் கட்டுப்பாட்டு விலை ரூபா 1-25 சதமாக விருக்க, ரூபாய் 3-25 சதத்துக்கு விற்றதாக மருதானை இரண்டாங் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஜி. டப்ளியூ. டிங்கி. அப்பு என்ற வியாபாரிமீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில சனிக்கிழமை கொழும்பு நீதிபதி எதிரிக்கு ரூ. 200 அபராதம் விதித்தார்.

---

### காந்திஜி வெளிநாட்டுக்கு அனுப்புஞ் செய்திகள்

பம்பாய் யூன் 6—

'இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஸ்தாபனங்கள் கேட்கும் கேள்விகளுக்குக் காந்திஜி அளிக்கும் பதில்கள் தணிக்கை செய்யப்படும் என்ற செய்தியால ஏற்படக்கூடிய தப்பபிப்பிராயத்தைப் போக்கப் பம்பாய் அரசாங்கத்தார் இன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்- அவ்வறிக்கை கூறுவதாவது:—காந்திஜிக்கென்று விசேஷ தடை எதுவுமகிடையாது. இராணுவக்காரணங்களை உத்தேசித்து இந்தியாவிலிருந்து வெளியே செல்லும எல்லாக் கடிதங்களும் தந்திகளும் தணிக்கை செய்யப்படுகின்றன. ஆகையால், காந்திஜியின் கடிதப் போக்குவரத்துகளும் தணிக்கை செய்யப்படும்.

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

டர்ந்துவருகிறானென்பதைத் திரும்பிப் பார்த்தபோது கண்டு தானும் மெல்ல மெல்ல நடந்து போனான்.

### "கெடுவது செய்யின் விடுவது கருமம்"

விசுவநாதன் தன்னைத் தொடர்ந்து வருதலைக்கண்ட பாலசிங்கன் சிறிது தாமதித்து நின்று அவனையுங் கூட்டிக்கொண்டு போகும்போது அவனைப் பார்த்து "விசுவநாதா, என்னை ஏன் பின்னும் பின்னும் இழுக்கிறாய்? நான்தான் உனக்கு ஆகாதவனானேனே; நீயும் உன்பாட்டிற் போகலாம்; நானும் என்பாட்டிற் போகிறேன்" என்றும் "இல்லை பாலா, உன்னை வெறுத்துப் பிரிந்துபோக மனமெழவில்லை; ஆனதால் நான் உன் வீட்டிற்கு வரவிரும்புகிறேன்" என்று கவலையுடன் சொன்னான் விசுவநாதன். "ஓம், தாராளமாய் வரலாம்; நீ என்னை வெறுத்தாலும் நான் உன்னை இன்னமும் வெறுக்கவில்லையே" என்றுசொல்லி அவனையும் உடன் கூட்டிக்கொண்டு தன் வீட்டிற்குப் போனான் பாலசிங்கன். அங்கே அவனுக்கு வழக்கம்போல் ஆகவேண்டிய உபசாரங்களையெல்லாஞ் செய்தான். விசுவநாதனோ பாலசிங்கனுடைய தொடர்பைக் கொள்ளவும் தள்ளவும் மனமில்லாதவனாய்த் தேக்கிலையில் நீர்போல் தியங்கினான். பாலசிங்கன் விவேகியாதலால் விசுவநாதனுடைய உள்ளம் ஊஞ்சல்போலச் சஞ்சலப்படுதலை ஒருவாறு உணர்ந்துகொண்டான்; அவன் உடனே எழுந்து தன் வீட்டிலுள்ள ஒரு அறையுட் சென்று ஒரு மதுபானம் நிறைந்த 'போத்தலை'யும் அதனை வார்த்துக் குடிப்பதற்காகிய ஒரு பளிங்குப் பாத்திரத்தையும் முறையே இரு கைகளிலும் பற்றியபடி மீண்டுவந்து தலைவாசற் பக்கத்தில் இருந்துகொண்டு விசுவநாதனைப் பார்த்து "அன்பா, உன் சொற்படி நானும் இந்தப் பொல்லாத மதுபானத்தை வெறுத்து விடப்போகிறேன்; நீயும் அப்படியே செய்யத் துணிந்தமை மெத்த நல்லது; ஆனால், இன்றைக்கு மாத்திரம் இதனைக் குடித்துவிட்டு நாளை தொடக்கம் மதுபானத்தைத் தீண்டுவதில்லையென்று இப்பொழுதே சத்தியஞ் செய்துவிடுவோம்; இதுவே கடைசிமுறை" என்று சொல்லிக்கொண்டு, போத்தலிலிருந்த மதுபானத்தில் ஒருபகுதியை அந்தப் பளிங்குப் பாத்திரத்தில் நிறைய வார்த்து நீட்ட, விசுவநாதன் அதனை வாங்கித் தன் முன்னிலையிலிருந்த மேசையின் ஒருபுறத்தே வைத்துவிட்டுப் பாலசிங்கனைப் பார்த்து "பாலா, இதுஎன்ன வேலை? நீயும் நானும் குடிப்பதில்லையென்று உறுதி செய்துகொண்டு, அதற்கு மாறாக உடனே இதனைக் குடிப்பதென்றால் உனது நியாயம் எனக்குப் புலப்படவில்லை; இவ்வளவு மனக்கட்டுப்பாடில்லாத நீயா மதுபானத்தை அறவே விடப்போகின்றாய்? நீ சொன்னாலும் நான் இதனை நம்பமாட்டேன். இதனால நீயுங் கெட்டு என்னையுங் கெடுக்கப்போகிறாய்; கெடுவது செய்யின் விடுவது கருமம் என்றபடி உப்படியான நோக்கம் உன்னிடத்தில இருக்குமானால் உன் தொடர்பை நான் விடாமல் முடியாது' என்று சொல்லிக்கொண்டு போகறகெழுந்தான் விசுவநாதன்; "சரி, அப்பா, நீ குடிக்கவேண்டாம்; சற்றுவேளை சும்மா இரு, பின்பு நான் உன்னை உன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போய் விடுகிறேன்" என்றான் பாலசிங்கன்; அப்பொழுது நேரம் இரவு எட்டு மணிவரையிலிருக்கும்.

(வரும்)

## பாரசூட் வீரர்களால் கரெந்தான் நகரம் பிடிக்கப்பட்டது

### தன்னந்தனியாகப் போராடிய அமெரிக்க பாரசூட்படை

லண்டன் யூன் 12

பிரான்ஸில் விமானமூலம் இறக்கப்பட்ட படைகளோடிருக்கும் ராய்ட்டரின் விசேஷ நிருபர் ராபட் ரூபன் பின்வருமாறு எழுதுகிறார்:-

செர்போர்க் தீபகற்பத்தில் போக்குவரத்துக்களின் கேந்திர ஸ்தானமாக இருக்கும் கரெந்தான் இன்று வீழ்ச்சியடைந்துவிட்டது. நமது பீரங்கிப்படைகளும் விமான மூலம் இறக்கப்பட்ட 101வது டிவிஷனும் இந்த நகரத்தை இருபக்கங்களாற் பலமாகத் தாக்கியதன் காரணமாகவே இது வீழ்ச்சியடைந்தது. இன்று வைகறையாமத்தில் அவர்கள் ஒரு பிரஞ்சுக் கிராமமொன்றினுட் புகுந்து, வீட்டுக்கு வீடாகச் சத்துரு படைகளை விரட்டிக்கொண்டு சென்று, ஈற்றில நகரைக் கைப்பற்றிக்கொண்டு சென்றனர்.

இந்தப் "பிரஞ்சுக் காஸினோ" வைச்சுற்றியிருக்கும பலம வாய்ந்த கோட்டைகளை நேற்று முழுவதும் அமெரிக்கப் பீரங்கிகள் தகர்த்தன. இரவாகியபோது நகரம் பற்றியெரிய ஆரம்பித்தது.

இரண்டு இரவும் இரண்டுபகலும் ஜெர்மானியரின்நிலைமை ஸ்திரமற்றதாக இருந்தது. தகர்க்க முடியாத கோட்டைகளுக்குட் பலம் பொருந்திய ஜெர்மன் படைகள் தங்களை நன்கு பலப்படுத்திக் கொண்டிருந்தன. இப்போது பிரபலயமடைந்திருக்கும் 101வதுபாரசூட்டிவிஷன் ஒன்றன்பின் ஒன்றாக நடத்திய தாக்குதல்களை அவர்கள் சமாளித்துக்கொண்டு நின்றனர்.

ஆனால், நேற்றிரவு நடைபெற்ற ஒரு மூர்க்கமான சண்டைக்குப் பிறகு அவர்கள் ஆட்டங்கண்டுவிட்டனர். நேற்றிரவும் இன்று அதிகாலையும் அவர்களின் அரண்கள் தகர்ந்துவிட்டன. இந்தத் தீபகற்பத்தில் நடைபெற்ற முதலாவது மூர்க்கமான சண்டை இதுதான். இருகட்சிகளுக்கும் பலத்த சேதமேற்பட்டது. எனினும, இந்தச் சண்டையிற் கிடைத்த வெற்றி ஒரு பலத்த ஜெர்மன் அரண் வீழ்ச்சியடைந்துவிட்டதென்பதை மாத்திரம் குறிக்கிறது. 101வது பாரசூட் பட்டாளத்தின் வீரமும் இதிலிருந்து நன்கு தெரிகிறது.

---

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூசை

நிகழும் தாரணவருஷம் வைகாசி மாதம் 26உ (8-6-44) வியாழக்கிழமையன்று மேட்டுத்தெருவிலுள்ள கொழும்பு விவேகானந்த சபையில திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூசைவிழாக் கொண்டாடப்பட்டது. சபையின் பூஜாக்கிருகத்தில் பூசை நிகழ்ந்தபின கந்தவனக்கோவில் அதிபரான சைவத்திருவாளர் நிக்கம் சி. செல்லையாபிள்ளையவர்கள் சுவாமிகளின வாழ்க்கையையும் சேவையும் குறித்து ஆராய்ச்சியோடு கூடிய ஓர் இனிய விரிவுரை நிகழ்த்தினார். பின அண்ணாமலை பல்கலைக்கழகச் சங்கீத மாணவர் திரு. தா. இராசலிங்கமவர்கள் பக்கவாத்திய சகிதமாகக் கீர்த்தன பாராயணஞ் செய்தனர். அதன்பின் சபையின் கௌரவ தனாதிகாரியாரும் திரு. எஸ். ஸ. சோமசுந்தரம்பிள்ளையவர்கள் பிரசாரகரவர்களும் திரு. இராசலிங்கமவர்களுக்கும் நன்றிகூறியதும அங்கு வருகைபுரிந்த அன்பர்களுக்குப் பிரசாதம வழங்கப்பட்டது.

—நிருபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தென் ஜெர்மனியிற் பரபரப்பு

### இரண்டாம் போர்முனையின் முதலாவது விளைவு

ஸூரிச் யூன் 10—

நேசதேசப்படைகள் மேற்குப் புறச் சுவரை ஊடுருவி வந்துவிட்டனவென்று விளங்கக்கூடியதாக ஜெர்மானியர் அறிவித்ததிலிருந்து தென்ஜெர்மனியிற் பரபரப்பும் பீதியும் ஏற்பட்டிருப்பதாக ஸுவிட்ஸர்லாந்து எல்லைப்புறத்துக்கு இன்று கிடைக்குஞ் செய்திகள் தெரிவிக்கின்றன. உண்மையான இரண்டாவது போர்முனை இலையுதிர்காலம் வரை பின்போடப்பட்டிருப்பதாய்ப் பலர் நம்பியிருந்தனர். "ஜெர்மன் விமானப்படை எங்கே?" என்றே சாதாரண மக்கள் கேட்கின்றனர்.

ஜெர்மன் எல்லைப்புறத்தை யுத்தம் நெருங்கிவர ஆரம்பித்தால் அந்நியநாட்டுத் தொழிலாளரும் யுத்தக் கைதிகளும் புரட்சி செய்யலாமாதலின், ஜெர்மன் தொழிலாளர் ஆயுதந் தரித்துக்கொண்டிருப்பதாக ஒருவர் கூறுகிறார். பொதுக் கட்டடங்களிலும் காரியாலயங்களிலும் காவலயீரர் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

## கல்வி மந்திரியின் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கணக்குக் காட்டிப் பள்ளிக்கூடச் சொந்தக்காரரால் துர்விநியோகஞ் செய்யப்படுகின்றதென எடுத்துக்காட்டியுள்ளார். இந்தப் பிழைகளெல்லாம் மதக்கட்சிப் பாடசாலை முறையை ஆதரிப்பதனால் நேர்ந்துள்ளனவாகும். இப்பொழுது இலங்கையிலேயுள்ள பாடசாலைகளின் தொகை 5805 ஆகும்; இவைகளிற் கல்வி பயிலும் மாணாக்கர் தொகை 819297 ஆகும். இத்தொகை போதியதன்று; போதிய கல்வி யூட்டப்படாமையினால் ஆசாங்கசபை முதலாம் சபைகட்கும் சங்கங்கட்கும் அங்கத்தவர்களைத் தேர்தல் செய்யும் விஷயத்திற் பல பிணக்குக்களும் தகராறுகளும் நேரலாயின.

இலங்கைச் சர்வகலாசங்க உபதலைவராகிய டக்டர். ஜெனிங்ஸ் மாணவர்களை அலட்சியஞ் செய்யும் விஷயத்தில் அப்பகுதிக்குரிய அதிகாரிகளைத் தாம் திருத்தி நடத்தும் பொறுப்பை ஒப்புக்கொள்ளவல்லராகத் தெரிவித்திருக்கிறார்; இதுகாறும் அலட்சியஞ் செய்யப்பட்டுள்ள எட்டு இலட்சம் மாணவர் விஷயத்தில் அவர் என்ன விதமான திருத்தத்தைச் செய்யப்போகின்றாரென்பது எனக்குப் புலப்படவில்லை."

## உபசாரணை

சுடுகணுவை புகைரதஸ்தானத் தலைவரும் இந்து மகாசபையின் அக்கிராசனாதிபதியுமாகிய திரு. பொ. தம்பிப்பிள்ளையவர்கள் தலைமன்னார் புகைரதஸ்தானத்திற்குத் தமது உத்தியோக கடமை காரணமாக ஆனிமாசம் 15ந்தேதி மாறிப் போவதால அவர்க்கென் இந்துமகாசபையின் ஆதரவில் ஆனிமாதம் 8ந் தேதி வியாழக்கிழமை மாலை நாலுமணியளவில் தலைவாது இல்லத்து உபசார விருந்து நடந்தேறியது. இந்துமகாசபையின் ஞாபகார்த்தமாக ஆரம்பத்தில் ஒரு புகைப்படம் பிடிக்கப்பட்டது. அதன்பின்னர்த் திருவாளர்கள், தெ. நாராயணநாயர் இ. தம்பிராசா கு. கனகரட்டினம் பண்டிதர் பொன்னம்பலம் ஆகியோர் இவரின் சிறந்த குணவிசேடங்களையும் பலன் கருதாது பணியாற்றும் பரோபகார சிந்தையையும் இப்பிரிவின் காரணமாகத் தாமும் தம்மவரும் அடையும் மனமடிவையுமிட்டு நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினர். பின் திரு. பொ. தம்பிப்பிள்ளையவர்கள் குறுந்த சொற்பொழிவாளர்களு நன்றிகூறியந்தம் முருகன திருவிளையாடலிற்

## விட்டுக் கொல்லைகளிற் பயிர் செய்தல்

### நகரத்தில் விவசாயச் சங்கங்கள் நிறுவ ஆலோசனை

கொழும்பு நகரின் முப்பது வார்டுகளிலும் முப்பது விவசாயச் சங்கங்கள் அமைக்கப்படவேண்டுமென்று உணவு உற்பத்திச் சுப்பிரிண்டெண்ட் நகரசபைக்கு ஆலோசனை கூறியிருக்கிறார். நகரசபை அங்கத்தவர் சிலர் தத்தம் 'வார்டு'களில இச்சங்கங்களை நிறுவச் சித்தமாயிருப்பதாகக் கூறுகின்றனர்.

நகர வாசிகளிடையே உற்சாகத்தை உண்டுபண்ணி அவர்களின் கொல்லைத் தோட்டங்களில உணவுப் பயிர் செய்யும் விஷயத்தில் அவர்கள் இன்னும் அதிகமான சிரத்தை எடுத்துக் கொள்ளும்படி செய்வதே இத்திட்டத்தில முதன்மையான நோக்கமாகும். சங்கங்கள் இருக்கும் பகுதிகளிற் பிரசாரம் செய்வதன் மூலம் இந்நோக்கம் கைகூடுமென்று கருதப்படுகிறது. இப்பொழுது நடைபெற்றுவரும் உணவு உற்பத்தி இயக்கத்தில் இயன்ற அளவு அங்கமாகப் பங்குபற்றிக் கொள்வதற்கும் வேண்டிய வசதிகளைப் பற்றி விவாதிப்பதற்கும் நகர மாந்தர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கப்படும்.

### காரிய நிர்வாக சபைகள்

தினசரி ஏராளமான ஜனங்கள் கொழும்பு உணவு உற்பத்திச் சுப்பிரிண்டெண்ட் (முகாந்திரம் ஆமெரசிங்ஹ) காரியாலயத்துக்கு வந்து உணவு உற்பத்தி விஷயமாக ஆலோசனை கேட்டும், இலவசமாக விதைகளைப் பெற்றுஞ் செல்கின்றனர். மேற்கூறப்பட்ட புதுவிதம் ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியதின் அவசியத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

ஆலோசிக்கப்பட்டிருக்கும் சங்கங்களின் காரியநிர்வாக சபைகளில உணவுப் பயிர்ச் செய்கையில இதுவரை அதிக ஊக்கங் காட்டியிருப்பவர்களும் அத்துறையில் அதிக ஞானம் உள்ளவர்களும் அங்கத்தவர்களாக இருப்பர். இச்சபைகளின் அங்கத்தவர்கள் உணவு உற்பத்தி விஷயமாக ஆலோசனையும் உதவியும் வேண்டியிருக்கும் நகரவாசிகளுடன் நேரடியான தொடர்பு வைத்திருப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவரவர்களின் 'வார்டு'களில் இச்சங்கங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி நகரசபை அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

## அறிவித்தல்

நல்லூர் வேலுப்பிள்ளை குமாரசுவாமியாகிய நான் அவ்வூர்ச் சின்னத்தம்பி பெண் கனகம்மாவிற்கு 1939ம் ஆண்டு நவம்பர்மாதம் 2ந் திகதி கொடுத்த நோட்டு ஓர் பொருத்த நோட்டென்றும் சொல்லப்பட்ட கனகம்மா பொருத்தத்தை மீறிவிட்டதால் அந்நோட்டிற்கு யாதொரு பெறுமதியில்லையென்றும் அந்த நோட்டுச் சாட்டுதலை வாங்கி ஒருவரும் ஏமாந்துபோக வேண்டாமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

வே. குமாரசாமி,
நல்லூர்.
14.6.44.

Mis 51 15&19.6.44

சிலவுரை கூறித் தமது தலைமையுரையை முடித்துக்கொண்டனர். அப்பால் சிற்றுண்டி தேநீர் முதலியன பரிமாறப்பட்டன. வாழ்த்துப்பாவுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

திரு. பொ. தம்பிப்பிள்ளையவர்கள் சுடுகணுவை வாசிகசாலைக்கும் தலைவராயிருந்து அதனை நடாத்திவந்தமைக்காக நன்றி தெரிவிக்குமுகத்தான் குறித்த வாசிகசாலைச் செயலாளர் அனைவரும் இவர்க்கென வாசிகசாலை மண்டபத்தில் நடாத்திய பிரிவுபசார விருந்தொன்றும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி யூன் 16

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 ப்ரேம கீதம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8 30 எஸ் அலமேலு பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 எஸ் அலமேலு பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 ஸி எஸ் ரத்தினசாமிபிள்ளை பாட்டு 5-40 தூரன்ஷீரீப் 6 திருவீழிமிழலை வி மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழிலசெய்திகள் 7-45 பறவை வீரன் நாடகம் 8 திருவீழிமிழலை வி மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 8-45 ஸி என் ரத்னசாமிப்பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10இசைவேளை† 10-30 முடிவு.

### சனி யூன் 17

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழல் செய்திகள் 8 கீமைத்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 தீரைக்கதம்பம் † 9 முடிவு.

1 எம் எஸ் நாராயணஸ்வாமி ஐயர் வயலின் 1-30 ஆங்கிலத்தில செய்திகள் 1-40 கதம்பம்† 2 தமிழில செய்திகள் 2-05 டி என் கலியாணம், டி என் மணி பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 எம் எஸ் நாராயணஸ்வாமி ஐயர் வயலின் 5 40 ஸ்கந்தபுராண விளக்கம் 6 டி என் கலியாணம், டி என் மணி பாட்டு 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஜப்பானை ஆராய்வோம் பேச்சு 7-30 அறிவிப்புகள 7-35 தமிழில செய்திகள் 7-45 டாக்கிஇசை† 8 மதராஸிலுள்ள படி 9 பி ஸி ஒலிப்பதிவு 9-20 ஆங்கிலத்தில செய்திகள 9-30 லண்டனிலிருந்துசெய்திகள 9-45 திருச்சி வாத்தியகோஷ்டி 10 இசைவேளை † 10.30 முடிவு.

### ஞாயிறு யூன் 18

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள 8 நாலவகை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள 8-30 இசைக்கதம்பம்† 9 முடிவு.

12 சீ! சீ! இந்தப்பழம் புளிக்கும்† 12-30ஒலிமலர் 1-30ஆங்கிலத்திலசெய்திகள 1-40 எஸ கிட்டம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள 2-05 கதம்பம்† 2-30 முடிவு.

மாலை 5 எஸ் கிட்டம்மாள் பாட்டு 5-40 தேவாரதன 6 திரைகானம் † 6-30 ஆங்கிலத்தில செய்திகள 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நமது தபால் பெட்டி 7-30 அறிவிப்புகள 7-35 தமிழில செய்திகள 7-45 நிறைபுல் சிக்கல் பேச்சு 8 திருப்பாமபுரம் என் சுவாமிநாதபிள்ளை புல்லாங்குழல 9-20 ஆங்கிலத்தில் செய்திகள 9-30 லண்டனிலிருந்து செய்திகள 9-45 ஐரோப்பிய சங்கீதம் † 10-0 இசைவேளை † 10.30 முடிவு.

### திங்கள் யூன 19

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில செய்திகள் 8 திருச்சி வாத்திய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கீரனூர் என வைத்தியநாத பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ பாஸ்கர் குரூப் பாட்டு 2தமிழில செய்திகள 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 கீரனூர் என் வைத்தியநாத பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 ஏ பாஸ்கரதுருப் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச்சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35தமிழில்செய்திகள் 7-45 இரு தூரலிசை† 8 எம் கே கனகாம்புஜம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 மூன்று வயலின்கள 10 திரைகானம்† 10-30 முடிவு.

## ஆண்டு விழா

நிகழும் தாரணஹு வைகாசிமாசம் 25-ந் தேதி (7-6-44) சுளிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை ஆரம்ப தின விழா, சண்டிலிப்பாய்ச் சைவ ஆங்கில வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான். K. தில்லையம்பலம் B. A. அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. பாடசாலைத் தலைமை ஆசிரியர் தமது அறிக்கையிற் கிராமவாசிகளும் இலங்கையின் பலபாகங்களில் வசிப்போரும் ஆகிய அன்பர்கள் செய்தபண உதவிகளையும், அவற்றாற் பாடசாலை அடைந்துள்ள வளர்ச்சியையும் நன்கு விளக்கிக் கூறினார்.

தலைவரும் சண்டிருப்பாய்ச் சைவ ஆங்கில வித்தியாசாலை மனேஜர் ஸ்ரீ. ப. மு. செகராசசிங்கம் அவர்களும் மலாய் நாட்டிலுள்ள சங்கத்தார் செய்தபெருஞ் செயலுக்காக அவர்களைப் பாராட்டியும் அவர்களுடைய உதவி கிடைக்கமுடியாத இச்சந்தர்ப்பத்திலும் தளரவிடாது சிறப்புற நடாத்துபவரும், சங்கானைக் கிராமச்சங்கத் தலைவராகப் பன்முறை தொண்டு செய்தவரும், தருமசீலராகிய ஸ்ரீ வ. பொன்னம்பலம் அவர்களையும், இவர்களோடு ஒத்துழைக்கும் உபசபையாரையும் போற்றியும் பேசினார்கள்.

பகுதி வித்தியாதரிசி ஸ்ரீ S. இராமலிங்கம் B. A. அவர்கள் கல்வியிற் பெற்றோர் ஒத்துழைப்பதற்கான வழிகளை விளக்கியும், சமயக் கல்வியை விளக்கியும் அரிய உபந்நியாசம் நிகழ்த்தினார்கள். பின், பாடசாலை மாணவர்கள் தங்கள் இனிய நடிப்புகள், பாட்டுகளாற் சபையோரைக் குதூகலிக்கச் செய்தனர். அதன்பின் சங்கீதவித்துவான் ஸ்ரீ C. S. S. மணி ஐயரவர்கள் பக்க வாத்தியங்களுடன் "முருகன் திருவவதாரம்" என்பதுபற்றி ஓர் இனிய கதாப்பிரசங்கஞ் செய்து மண்டபத்தில் நிறைந்திருந்த சனத்திரளை மகிழ்வித்தார்.

வந்தனோபசாரத்துடன் விழா பூர்த்தியெய்திற்று. —கடிதம்.

## மனைவியைக் கூரையிலிருந்து தள்ளிய கணவன்

### 7 வருடக் கடுங்காவலும் ரூ 10000 அபராதமும் விதிக்கப்பட்டார்

லாகியானு யூன் 8

ஜாகரான் வரதக்ஷிணை வழக்கில எதிரி பீபின் சந்திரபாலுக்குச் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால 7 வருடக் கடுங்காவல் தண்டனையும் ரூபா 10000 அபராதமும் விதிக்கப்பட்டது. தயாவதி என்ற மனைவியை மணந்து அவள் வீட்டுக்குச் சேர்ந்ததும் மேலும் வரதக்ஷிணையைக் கேட்டு வாங்கி வரும்படி எதிரி வற்புறுத்தியதாகவும் அது பலனடையவில்லையெனக்கண்டதும் மனைவியை வீட்டுக் கூரையிலிருந்து கீழே தூக்கி வீசிவிட்டதாகவும் அதனால அவளுக்குப் படுகாயம் பட்டதாகவும வழக்கிற குறிப்பிடப்பட்டது.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நறறவம் வேள்விமல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 15 June, 1944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org